உதயம்
22

தாரகை
3

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி.

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

பனிமயம் விளம்பர விபரங்கள்

அரைப்பக்க விளம்பரம்	-	ரூ. 500/-
முழுப்பக்க விளம்பரம் பின் பக்க அட்டை	-	ரூ. 1000/-
உட்புற விளம்பரம் பின் பக்க அட்டை	-	ரூ. 1500/-
வெளிப்புற விளம்பரம்	-	ரூ. 2000/-

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள்

மனச்சோர்வு அல்லது தீக்காயத்தால் அவதிப்படுபவர்கள் ஆதரவையும் வாழ்க்கைக்குத் திறக்கும் ஒளியையும் பெற வேண்டும் என்று மன்றாடுவோம்.

உள்ளே...

1. உத்தரிக்கும் ஆன்மாக்களும் அன்னை மரியாவும்! 4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
திருத்தந்தை புனித 23ஆம் ஜான் 6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை 8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... 10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமயம் - மீள்பார்வை 12
கலாபன் வாஸ்

6. நம் திருச்சபை, நமது பெருமை 14
"மிலியன்"

7. விவிலியப் போட்டி 16

8. மாதம் ஒரு மாதா படம் 19

9. பனிமயப் பகிர்வு 20

10. பனிமய சாட்சியம்.....24

மரியன்னையின் மேன்மைகள் : 21

உத்தரிக்கும் ஆன்மாக்களும், அன்னை மரியாவும்!

நவம்பர் மாதத்தில் இறந்த நம்பிக்கையாளர்களுக்காக, சிறப்பாக உத்தரிக்கும் நிலையிலுள்ள ஆன்மாக்கள் வீடுபேறு பெற மன்றாட அழைக்கப் படுகிறோம்.

உத்தரிக்கும் தலம் அல்லது நிலை என்றால் என்ன? மீட்பின் அருளோடு இறப்பவர்கள், ஆனால், முற்றிலும் தூய்மையடையாத ஆன்மாக்கள், இறைவனின் பேரின்பத்தைத் துய்ப்பதற்கு முன்னதாக துன்பத்தால் தூய்மைப்படுத்தப்படும் நிலையே உத்தரிக்கும் நிலை என்பது நம் திருஅவையின் போதனை.

புனித ஃபவுஸ்தினா கண்ட காட்சி ஒன்றில் உத்தரிக்கும் நிலையை இவ்வாறு வர்ணித்துள்ளார்: "ஆன்மாக்கள் துன்புறும் பெருநெருப்பின் இடமொன்றை நான் கண்டேன். மிகவும் உருக்கமாக அவர்கள் மன்றாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களால் தங்களுக்குத் தாங்களே உதவ முடியாது. நாம்தான் அவர்களுக்கு உதவ முடியும். அவர்களை எரித்த நெருப்பு என்னைத் தொடவே இல்லை. அவர்களது மாபெரும் துயரம் இறைவனைக் காணாமல் ஏங்கிக்கொண்டே இருப்பதுதான்".

உத்தரிக்கும் நிலையிலிருப்போருக்கு நாம் செய்யும் மிகப் பெரிய உதவி அவர்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பது தான். அதற்கு அடுத்த பெரிய உதவி அவர்களுக்காக செபமாலை செபிப்பதே. செபமாலை வழியாக இயேசுவின் மீட்பின் ஆற்றல் அனைத்தையும் அன்னை மரியாவோடு இணைந்து தந்தை இறைவனுக்கு நாம் ஒப்புக்கொடுக்கிறோம். எனவே, செபமாலை அவர்களின் விடுதலையில் பெரும் பங்கு வகிக்கிறது.

திருஅவையின் தாய் என்று அன்னை மரியாவை நாம் அழைக்கிறோம். இத்திருஅவை விண்ணகத்தில் மகிழும் வெற்றித் திருஅவை, மண்ணகத்தில் இயங்கும் பயணத் திருஅவை, உத்தரிக்கும் நிலையிலுள்ள துன்புறும் திருஅவை என மூன்று குழுக்களாக இயங்குவதையும் நாம் அறிவோம். அன்னை மரியா திருஅவையின் அன்னை என்னும் வகையில் இம்மூன்று குழுக்களுக்குமே தாயாக இருக்கிறார். எனவே, உத்தரிக்கும் நிலையிலிருப்போருக்காகவும் அவர் மன்றாடி அவர்களை விடுவிக்கிறார்.

அருளாளர் ஆலன் டி லா ரோச்சுக்கு அன்னை மரியா தோன்றி செபமாலை பற்றி வழங்கிய 15 வாக்குறுதிகளில் ஒன்று "செபமாலையைப் பக்தியோடு செபிக்கிறவர்களை உத்தரிக்கும் தலத்தில் இருந்து மீட்பேன்" என்பது.

சூசன் டசோன் எழுதிய "உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக செபமாலை" என்னும் நூலில் செபமாலை என்பது ரோஜாக்களின் மாலை. ஒவ்வொரு முறையும் "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று நாம் செபிக்கும்போது, அன்னை மரியாவுக்கு நாம் ஒரு ரோஜா மலரை அர்ப்பணிக்கிறோம். அன்னை மரியாவோ அந்த ரோஜா மலரை ஆண்டவர் இயேசுவிடம் வழங்குகிறார். இந்த ஒவ்வொரு மலரும் ஒவ்வோர் ஆன்மாவுக்குப் பலன் தருகிறது. வாழ்வோருக்கும், இறந்தோருக்கும் அன்னையான மரியா செபமாலை வழியாக இறந்த ஆன்மாக்களுக்காகப் பரிந்து மன்றாடுகிறார் என்கிறார்.

உத்தரிக்கும் நிலையிலுள்ள ஆன்மாக்களை மீட்கும் வல்லமை அன்னை மரியாவுக்கு உள்ளது என்று அறிக்கையிட்டார் புனித சியன்னா பெர்னார்தின். செபமாலையைப் பக்தியோடு செபிக்கிறவர்களை உத்தரிக்கும் நிலையிலிருந்து மீட்டுக்கொள்வதாக அன்னை மரியா அருளாளர் ஆலன் டி லா ரோச்சுக்கு வெளிப்படுத்தினார். எனவே, உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக நாம் செபமாலை மன்றாடுவோமாக.

புனித பிரிஜிட்டுக்கு காட்சி தந்த அன்னை மரியா "உத்தரிக்கும் நிலையில் வேதனைப் படும் அனைவருக்கும் நானே அன்னை. அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை என் மன்றாட்டால் நான் குறைப்பேன்" என்று மொழிந்தார். "நீரே இரக்கத்தின் அன்னை. நீரே உத்தரிக்கும் நிலையில் இருப்போருக்கு ஆறுதல்" என்று இயேசு தம் தாயை நோக்கிச் சொன்னதாக புனித பிரிஜிட் எழுதியுள்ளார். "நோயுற்று படுக்கையில் உழல்வோர் ஆறுதல் சொல் கேட்டு மனம் குளிர்வதுபோல, உத்தரிக்கும் நிலையில் இருப்போர் என் பெயரைக் கேட்டு ஆறுதல் பெறுவர்" என்று அன்னை மரியா புனித பிரிஜிட்டுக்கு வெளிப்படுத்தினார்.

"உத்தரிக்கும் நிலையில் துன்புறுவோரிடம் நம் அன்னை எத்துணை பரிவு காட்டுகிறார். அவர் வழியாக அவர்கள் மிகுந்த ஆறுதல் பெறுகின்றனர். நம் அன்னையைவிட வேறு ஆறுதல் அவர்களுக்கில்லை" என்பது வின்சென்ட் ஃபெரர் என்னும் புனிதரின் சாட்சியம்.

மரோசியா என்னும் பெண் தனது ஞானத்தாய்க்குக் கனவில் தோன்றி விண்ணேற்புப் பெருவிழா அன்று உத்தரிக்கும் தலத்திலிருந்து தாம் விடுவிக்கப் பட்டதாகவும், எண்ணற்ற வானதூதர்கள் அவரை விண்ணகம் அழைத்துச் சென்றதாகவும் புனித பீட்டர் தமியான் எழுதியுள்ளார். உத்தரிக்கும் ஆன்மாக்களின்மீது மரியன்னை காட்டும் பரிவுக்கு இத்தகைய அனுபவங்கள் கட்டியம் கூறுகின்றன.

எனவே, இறந்த நம் உற்றார், உறவினருக்காக மட்டுமல்ல, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் நாம் மன்றாடுவோம். அவர்களுக்காகத் திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பதோடு, செபமாலை செபிப்பதும் மிகச் சிறந்தது. மேலும், எளியோருக்கு உணவிடுதல், ஆடைகள் வழங்குதல், நோயாளர்களைச் சந்தித்தல், பிறரை மன்னித்தல் போன்ற அன்புச் செயல்களையும் இறந்த ஆன்மாக்களுக்காக நாம் ஒப்புக்கொடுக்கலாம். அப்போது இந்த ஆன்மாக்கள் இறைவனின் திருவடிகளில் சேர்வார்கள்.

உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக நாம் மன்றாடுவது அவர்களுக்குப் பலன் தருவதோடு, நமக்கும் நன்மை செய்கிறது. விண்ணகம் சென்ற இந்த ஆன்மாக்கள் நமக்காகப் பரிந்துரைத்து மன்றாடுவார்கள் அல்லவா? நமது செபங்களால் விண்ணகத்தில் நண்பர்களைச் சம்பாதித்துக்கொள்கிறோம். எனவே, மிகவும் இரக்கமுள்ள தாயான அன்னை மரியா வழியாக உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக நாம் பரிந்து மன்றாடுவோமாக!

அருள் மரி வேந்தன்

48 மரியன்னைப் புனிதர்கள்

திருத்தந்தை புனித 23ஆம் ஜான்

(1881 - 1963)

அன்னையின் அருளால் திருஅவையைப் புதுப்பித்தவர்!



மரியன்னை பக்தர்களில்தான்

எத்தனை வகைகள்! செபமாலை பக்தர்கள், பாதயாத்திரைப் பக்தர்கள், சப்பரப் பவனிப் பக்தர்கள் என்று எத்தனையோ வகையினர் உள்ளனர். ஆனால், தனித்துவமான, அதிர்ச்சி தரும் ஒரு மாதா குழுவினரும் நம்மிடையே இருக்கின்றனர். இவர்களைக் "கத்தோலிக்கர் அல்லாத மாதா பக்தர்கள்" என்று அழைக்கலாம்.

என்ன, வியப்பாக இருக்கிறதா? ஆம், இவர்களிடம் மாதா பக்தியைத் தவிர, கத்தோலிக்க நம்பிக்கையின் இதர வெளிப்பாடுகள் எதுவும் இருக்காது. இவர்கள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் போதனைகளை ஏற்றுக்கொள்வதில்லை, இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் வந்த எந்த திருத்தந்தையையும் ஏற்றுக்கொள்வதில்லை. அதற்குப் பின் வந்த வழிபாடுகள், செப முறைகள், போதனைகள் எதையும் ஏற்றுக்கொள்வதில்லை. "ஆச்சரியம், ஆனால் உண்மை" என்பது இவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

இவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தி இரண்டாம் வத்திக்கான் சங்கம் என்பதே அன்னை மரியாவின் ஆசியோடு நடைபெற்ற ஒரு திருநிகழ்வு என்பதே. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால், சரியாகச் சொல்வதானால், 1962 அக்டோபர் 4ஆம் நாள், திருத்தந்தை 23ஆம் ஜான் இத்தாலியிலுள்ள லொரெட்டோ மரியன்னைத் திருத்தலத்துக்குத் திருப்பயணமாக வந்து சங்கத்தை மரியன்னையின் அடைக்கலத்தில் ஒப்படைத்து மன்றாடினார்.

அப்போது அவர் மன்றாடிய செபம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. "ஓ இனிய அன்னையே, உரோமை ஆயரான நானும், உலகெங்குமிருந்து வரும் எல்லா ஆயர்களும் இந்த ஒன்றுகூடலை உம்மிடம் ஒப்படைக்கிறோம். பேதுருவின் பேராலயத்தில் நாங்கள் நுழையும்போது எங்களுக்காகப் பரிந்து மன்றாடும். உமது தாய்மையின் பரிந்துரையால் திருஅவை புதிய வலிமையை, புதிய தாராளத்தன்மையை, புதுப்பித்தலைப் பெற்றுக்கொள்வதாக" என்னும் மன்றாட்டு அவரது மரியன்னை பக்தியை மட்டுமல்ல, திருஅவையின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் எடுத்துக்கூறுகிறதல்லவா?

அது மட்டுமல்ல, வத்திக்கான் சங்கக் கூட்டத்திற்காக செபமாலை செபிக்கும்படி உலகளாவிய கத்தோலிக்கர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார் திருத்தந்தை ஜான். எனவே, இரண்டாம் வத்திக்கான் சங்கம் நம் தாயின் ஆசி பெற்ற, செபமாலை செபித்து நாம் பெற்றுக்கொண்ட ஓர் ஆசீர்வாதம் என்பதை நாம் உணரவேண்டும்.

இத்தாலியிலுள்ள சோத்தோ இல் மோந்தே என்னும் இடத்தில் 1881 நவம்பர் 25 அன்று ஆஞ்சலோ ஜொசிப்பே ரொங்காலி என்ற இயற்பெயருடன் பிறந்தவர்தாம் திருத்தந்தை 23ஆம் ஜான். ஜியோவான்னி ரொங்காலி, மரியன்னா ஜூலியா என்னும் வேளாண் தம்பதியரின் 13 குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர் இந்த ஆஞ்சலோ ரொங்காலி. நிறைய உடன்பிறப்புகளுடன் பிறந்ததால், உறவின் மனிதராக வளர்ந்தார்.

தமது 11ஆவது வயதிலேயே குருமடத்தில் சேர்ந்துவிட்டார். குருமாணவராய் இருக்கும்போதும், குருவானவரான பிறகும் இத்தாலிய இராணுவத்தில் பணியாற்றியிருக்கிறார். 1904ஆம் ஆண்டில் தமது 23ஆம் வயதில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். தொடர்ந்து திருஅவைச் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

1925ஆம் ஆண்டு பல்கேரிய நாட்டின் தூதுவராகவும், பின்னர் 1934ஆம் ஆண்டு துருக்கியில் திருத்தந்தையின் தூதுவராகவும் நியமிக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார். 1953ஆம் ஆண்டு வெனிஸ் உயர் மறைமாவட்டத்தின் கர்தினாலாக நியமிக்கப் பட்டார். 1958ல் தமது 76ஆவது வயதில் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புற்றுநோயின் காரணமாக 1963ஆம் ஆண்டு ஜூன் 3ல் தனது 81ஆவது வயதில் இறந்தார்.

சமூக நீதியை வலியுறுத்தும் "அன்னையும் ஆசிரியையும்" என்னும் சுற்றுமடலை 1961ஆம் ஆண்டு வெளியிட்டார். கிறித்தவ சபைகளுக்குள்ளே ஒன்றிப்பை ஊக்கப்படுத்தும் பணிக்குழுவை ஏற்படுத்தினார். 1958 முதல் 1963 வரையில் மொத்தமாக ஐந்தே ஆண்டுகள் மட்டுமே திருத்தந்தையாகப் பணியாற்றினாலும் "நல்ல திருத்தந்தை" ("The Good Pope") என்று அன்போடு அழைக்கப்பட்டார். அமெரிக்காவின் "டைம்" இதழின் "இந்த ஆண்டின் சிறந்த மனிதர்" என முதன் முதலாக அறிவிக்கப்பட்ட திருத்தந்தை இவரே. (பிற்காலத்தில் இரண்டாம் ஜான் பவுல் (1994), பிரான்சிஸ் (2013) இருவரும் இந்தச் சிறப்பைப் பெற்றனர்).

புகழ்பெற்ற இத்திருத்தந்தை மரியன்னைத் திருத்தந்தை என்றும் அழைக்கப்படுவதில் வியப்பில்லை. நாள்தோறும் செபமாலை செபிக்கின்ற பழக்கம் கொண்ட திருத்தந்தை ஜான் இப்பழக்கத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று ஊக்குவித்தார். நோயுற்ற குழந்தைகள் அவரைச் சந்திக்க வந்தபோது அவர்களின் இறைபக்தியைப் பாராட்டினார். ஒருநாளில் பத்து மணிகளாவது செபமாலை செபிக்கின்ற அவர்களின் ஆர்வத்தை ஊக்குவித்தார். "செபம் இல்லாத நாள் மலர்கள் இல்லாத தோட்டம் போன்றது" என்று அவர்களிடம் சொன்னார். அவரது அன்றாட செபமாலையில் மகிழ்வின் மறையுண்மையான இயேசு பிறந்ததைத் தியானித்து 10 மணிகளை செபிக்கும்போது, அந்த மணிகளை முந்தின நாளில் பிறந்த அனைத்துக் குழந்தைகளுக்காகவும் ஒப்புக்கொடுத்தார் என்று அறிந்து வியக்கிறோம்.

எல்லா மரியன்னைப் புனிதர்களையும் போலவே, திருத்தந்தை 23ஆம் ஜானும் மரியன்னைக்குப் பல மன்றாட்டுகளை எழுதினார். இதோ, அவரது மன்றாட்டுகளுள் ஒன்று: "ஓ மரியே, என் குழந்தைப் பருவத்திலிருந்தே உமது திருப்பெயர் என் நாவில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. நான் குழந்தையாய் இருந்தபோது உம்மை என் தாயாக அன்புசெய்தேன். ஆபத்துகளில் உம்மைக் கூவியழைத்தேன். உமது பரிந்துரையில் நம்பிக்கை கொண்டேன்". என்னே ஓர் அழகிய மன்றாட்டு!

நாம் மரியன்னையின் அன்புப் பிள்ளைகள் என்றால் திருஅவையின் போதனை, வழிபாடு, அதிகாரம் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நம்மை ஊக்குவிக்கிறார் நல்ல திருத்தந்தை 23ஆம் ஜான்.

அருள்பணி. குமார்ராஜா

பனிமய அன்னை 13

டச்சுக்காரர்களின் ஆளுகை

போர்த்துக்கீசியரின் தலையீடு

1629 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் போர்த்துக்கீசிய ஆளுநராக கோவாவில் புதிதாக பொறுப்பேற்ற **கொம்தே தி லீனாரஸ்** என்பவர், இயேசு சபையினரை விரும்பாதவர். அவர் நியமித்த தூத்துக்குடியின் தளபதி **சுவாரஸ் தி பிரிட்டோ** என்பவரும் இயேசு சபையினரை விரும்பாதவர்.

அந்தக் காலக்கட்டத்தில் கொச்சி ஆசனக் கோவிலின் ஆலோசனை மன்றத்தினர், முத்துக்குளித்துறையின் தலைமைக் குருவாக **ஜார்ஜ் டி சில்வா** என்ற சிரியன் குருவொருவரை நியமனம் செய்தனர். இவர் 1631 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாளன்று தூத்துக்குடி புனித இராயப்பர் ஆலயத்தை இயேசு சபையினர் பொறுப்பில் இருந்து பலவந்தமாக எடுத்துக்கொண்டார்.

பின்னர், இந்த சிரியன் குரு தூத்துக்குடியின் தளபதி **சுவாரஸ்** என்பவருடன் சேர்ந்துகொண்டு, ஆலயத்தை சேதப்படுத்தி சூறையாடினார். இதனால் துன்புற்ற இயேசு சபைக் குருக்கள், இயேசு சபை அதிபர் **பெர்னாண்டோ லோபஸ்** இட்ட கட்டளையின் படி கொழும்புக்கு சென்றுவிட்டனர்.



1632 ஆம் ஆண்டில், போர்த்துக்கீசிய மன்னர் **பிலிப்பு**வின் (Philip III of Portugal, 1621-1640) ஆணையின் பேரில், இயேசு சபையினர் மீண்டும் முத்துக்குளித் துறைக்குத் திரும்பி வந்து ஆலயங்களைக் கண்காணித்தனர். அப்போது முத்துக் குளித்துறையில் 12 பங்குகள் இருந்தன.

கோவா ஆளுநர் **கொம்தே தி லீனரஸ்** இயேசு சபையினர்க்கு எதிராக பல வன்முறைகளில் ஈடுபட்டு, 1635 ஆம் ஆண்டில் 2 கப்பல்கள் கொண்ட ஒரு போர்த்துக்கீசியப் படையை முத்துக்குளித் துறைக்கு அனுப்பி, தூத்துக்குடியையும் அதனையடுத்த பல கடற்கரை கிராமங்களையும் அழித்தான்.

1638 ஆம் ஆண்டிலே நீண்ட இடைவெளியான 33 ஆண்டுகளுக்குப் பின் தூத்துக்குடியில் செழிப்பானதொரு முத்துக்குளித்தல் நடைபெற்றது. அதே ஆண்டில் தூத்துக்குடியில் மீண்டும் மூண்ட கலவரத்தில், தொமினிக் சபையைச் சேர்ந்த கொச்சி **ஆயர் மொகோல் தா குருஸ் ரன்கால்** (Dom Moguel Da Cruz Rangal, 1633-1646) என்பவரும் அவரது குருக்களும் கொடுத்த இன்னல்களால், இயேசு சபைக் குருக்கள் மனமுடைந்து, முத்துக்குளித்துறையை விட்டு மீண்டும் வெளியேறுவது என முடிவெடுத்தனர். இது குறித்து மலபார் இயேசு சபை மாநிலத் தலைவர் **மனுவேல் தி அசுவேதோ** உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவர் **வித்தலெஸ்கி** (Vitteleschi) என்பவருக்கு மடலொன்றை மனவேதனையோடு எழுதியுள்ளார்.

டச்சுக்காரர்கள் தூத்துக்குடிக்கு வருகை

1602 ஆம் ஆண்டில் கால்வனியப் பதிதக் கொள்கை (Calvinism) நிறைந்த ஹாலந்து நாட்டில் உருவான **கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி** (East India Company) அளித்த ஆதரவில் டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தனர்.

தூத்துக்குடியைக் கைப்பற்ற விரும்பிய டச்சுக்காரர்கள், 1648 ஆம் ஆண்டில் காயல் பட்டணத்தில் ஒரு சிறிய வர்த்தகச் சாவடியை அமைத்தனர். இதனையறிந்த மதுரை நாயக்கன் **திருமலை நாயக்கன்** (1633 1659) டச்சுக்காரர்களை காயல்பட்டணத்திலிருந்து விரட்டியடித்தான். உடனே, இலங்கைத் தீவிலுள்ள காலி (Galle) என்ற இடத்தின் டச்சு ஆளுநரான **சூய்கிரியர்** 1648 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் நாளன்று திருச்செந்தூர் முருகன் கோவிலைக் கைப்பற்றினார்.

1649 ஆம் ஆண்டில் முதல் முறையாக தூத்துக்குடிக்கு வந்த டச்சுக்காரர்கள், பரவ மக்களுக்கும் அவர்களுக்கு ஆதரவான இயேசு சபைக் குருக்களுக்கும் பல இன்னல்கள் கொடுத்து, தூத்துக்குடியை கொள்ளையடித்தனர்.

1658 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தையும் இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றினர். 1658 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், டச்சுத் தளபதி **ரிஜ்க்லோவ் வன்கோவன்ஸ்** என்பவர், ஒரு பெரும் படையுடன் இலங்கையிலுள்ள நீர்கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து முகாமிட்டார். அப்போது, அங்கு போர்த்துக்கீசியர் பலம் குன்றிப் போயிருந்த தால், டச்சுத் தளபதி தூத்துக்குடியை எளிதாக கைப்பற்றிக் கொண்டார். காலகாலமாக முத்துக்குளித்துறை மக்கள் அனுபவித்து வந்த முத்துக்குளிப்பு உரிமையையும் டச்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

தூத்துக்குடியைக் கைப்பற்றிய டச்சுகாரர்கள் மனநிறைவு கொள்ளாது வேம்பார், வைப்பார், பழையகாயல், புன்னைக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி முதலிய இடங்களையும் தங்களது ஆளுகைக்கு உட்படுத்திக் கோட்டைகள் பல அமைத்து, வணிகம் புரியத் தொடங்கினார்.

இலங்கையிலிருந்து வந்த டச்சுத் தளபதியுடன் டச்சுப் பாதிரியார் **பல்டேயுஸ்** (Philippus Baldaeus, 1632-1672) என்பவரும் வந்தார். இவர் தூத்துக்குடியில் தங்கியிருந்து, பரவ மக்களை கால்வினியப் பதித மதத்திற்கு கொண்டு வரும் எண்ணத்தில், கத்தோலிக்கத் திருமறையை அடியோடு அழிக்க முனைந்தார். தூத்துக்குடியின் பங்கு ஆலயமான புனித இராயப்பர் ஆலயத்தை டச்சுக்காரர்கள் தங்களது வணிகக் கூடமாக மாற்றினர்.

இயேசு சபையினரின் தலைமை இல்லத்தை சேர்ந்த பனிமய அன்னை ஆலயத்தையும். பிரான்சிஸ்கு சபை மடத்தைச் சேர்ந்த தேவ அன்னை ஆலயத்தையும். டச்சுக்காரர்கள் அபகரித்துக் கொண்டு தங்களது மதவழிபாட்டை நடத்தி வந்தனர்.

இயேசு சபைக் குருக்களை மக்களுக்குப் பணியாற்ற டச்சுக்காரர்கள் அனுமதிக்காததால், இயேசு சபைக் குருக்கள் தூத்துக்குடியை விட்டு வெளியேறி உள்நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்து கொண்டே, இயேசு சபைக் குருக்கள் ஆன்மீகப் பணியாற்றி வந்தனர் என்று முத்துக்குளித்துறை இயேசு அதிபர் **ஜான் பிலிப் கிராந்தி**, இயேசு சபைத் தலைவர் **பவுல் ஒவிவா** (Giovanni Paolo Oliva, 1600-1681) என்பருவருக்கு 1666 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் நாளன்று எழுதிய மடலில் குறிப்பிடுகிறார்.

1667 ஆம் ஆண்டு இயேசு சபை அறிக்கையில் மணப்பாடு, வீரபாண்டியன் பட்டணம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வேம்பார் ஆகிய பெரிய ஊர்களில் இருந்த ஆலயங்களை டச்சுக்காரர்கள் கிட்டங்கிகளாக மாற்றிவிட்டனர் என்று கூறப்படுகின்றது.

டச்சுக்காரர்களின் செப வழிபாடுகளில் கலந்து கொள்ளாத பரவ மக்களுக்கு அநியாயமாய் அபராதம் விதிக்கப் பட்டாலுங்கூட, பரவ மக்கள் தங்களின் கத்தோலிக்க விசுவாசத்திற்காக ஞாயிறு தோறும் கால்நடையாக தொலைதூரம் சென்று, இயேசு சபையினரின் காட்டுக் கோவில்களில் நடைபெறும் திருப்பலியில் பங்கு பெற்று வந்தனர்.

தூத்துக்குடி மக்களிடையே கால்வினிய பதித மதத்தை புகுத்துமாறு உத்தரவு பெற்ற **பல்டேயுஸ்** பாதிரியாரும், அவருக்கு பின்வந்த **லிஸ்பன்** (Lisbon) நகரைச் சேர்ந்த பாதிரியார் **ஜான் பெரைரா அல்மெய்தா** (John Pereira Almeida) என்பவரும், பரவர்களை பதித மதத்திற்கு இழுப்பதில் தோல்வியைக் கண்டனர்.

டச்சுக்காரர்களின் பதித வழிபாடுகளில் பரவ மக்கள் எவரும் கலந்து கொள்ளக்கூடாது என்று பரவரின் சாதித் தலைவர் தொன் சவியேர் ஹென்றி தெக்குரூஸ் கொறேரா (1646 1671) ஆணையிட்டு இருந்தார். அந்த ஆணையை மீறி, பதித வழிபாட்டில் கலந்து கொள்ள வந்த பரவ செல்வந்தர் ஒருவரை சாதித் தலைவரின் பணியாட்கள் கைது செய்து மரணத் தீர்ப்பிட்டு கொலை செய்தனர். *-தொடரும்*

தி. சொர்ணராஜன் விக்டோரியா

6 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

(1930 - 1954)

அருள்தந்தை அலங்காரம் அடிகளார் பணியாற்றிய பத்தாண்டு காலத்தில் அவருக்கு மிகவும் சவாலாகப் பரிணமித்த காலம் என 1946/47ஆம் ஆண்டுகளைக் குறிப்பிடலாம். அரசியல் களத்தில் காந்தியடிகள் தலைமையில் நடந்த சத்யாகிரக சமரத்தின் விளைவாக இந்திய சுதந்திரத்தின் முன்னோடியாக 1946ஆம் ஆண்டு பண்டித ஜவகர்லால் நேரு தலைமையில் ஒரு இடைக்கால சர்க்கார் அமைந்ததைத் தொடர்ந்து, இலங்கை ஒன்றையே வணிக நடுவமாகக் கருதி பொருளீட்டிக் கொண்டிருந்த பரதவ கத்தோலிக்கர்கள், சமுதாய உணர்ச்சியோடு இந்திய இலங்கை சுதந்திரத்திற்குப் பின் நிகழப்போகும் மாற்றங்களைச் சமாளிப்பது பற்றி சிந்திக்கத் தொடங்கினர்.

1920ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தொடங்கிய பரத மகாஜன சங்கத்தில் 1946 ஆகஸ்டில் கூடி பரிசுத்த பனிமய அன்னை திருநாளைக்கு அடுத்த நாளாகிய 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் நாள் ஒரு மாநாடு நடத்தி இளைஞர்களுக்கு உயர்கல்வி, வேலை வாய்ப்பு, சமுதாயத்துக்கும் சமயத்திற்கும் உள்ள உறவு சமுதாய வளர்ச்சிக்கு இடையூறாக இராத வண்ணம் முன்னேற்றமடைய எத்தகைய திட்டங்களைத் தீட்டலாம் போன்றவை பற்றி விவாதித்து ஆலோசித்து ஒரு திடமான திட்ட வடிவை உருவாக்க வேண்டுமென தீர்மானித்தனர். அதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்தனர்.

சமுதாயத்தில் புற்றுநோய்போல் புரையோடிக் கிடக்கும் இரு பிரிவுகளாகப் பிளவுபட்டு தங்களுக்குள்ளேயே முட்டி மோதிக் கொண்டிருந்த சூழலில், அவர்களுக்கு எதிரணியாகச் செயல்பட்டவர்கள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் 1947ஆம் ஆண்டு அன்னையின் திருநாளன்று தேர்த்திருவிழாவாக கொண்டாடலாம் என மக்களைத் திசை திருப்பினர்.

1926ஆம் ஆண்டு நடந்த ஜாதித் தலைவன் பொறுப்பேற்பு, அதோடு நடைபெற்ற தங்கத் தேர்விழாவின்போது முதலில் வடந் தொட்டுக் கொடுத்தல் போன்ற பிரச்சனைகளின் பின்னணியில் இரு பிரிவுகளுக்கும் இடையில் வெடித்துக் கிளம்பிய சக்திமிக்க வேறுபாடும் கலவரங்களும் வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு ஆழமான காயத்தின் வடுவை விட்டுச் சென்றது. கி.பி. 16ஆம் நூற்றாண்டு முதல் இயேசு சபை கல்லூரிச் சிற்றாலயத்தை சுற்றி

ஆலயத்தின் அனுபவத்தில் இருந்த வளாகம் (compound) சக்திமிக்க ஒரு பிரிவினரின் சூழ்ச்சியால் அரசு நிலமாக மாற்றப்பட்டது. அதற்குப் பக்க பலமாயிருந்து நடத்தியது அன்றைய நகர மன்றத் தலைமை மற்றும் மறை மாவட்ட நிர்வாகம் என்பதை அறியும் போது கடற்கரை கத்தோலிக்க சமுதாயம், கல்வி, பொருளாதாரம் அரசியல் போன்ற துறைகளில் இன்றுவரை பின் தங்கிக் கிடப்பதன் காரணிகள் எவை எனத் தேடுவது தேவையற்றது.

1926ஆம் ஆண்டுக்குப் பிறகு இருபத்தேரு ஆண்டுகளாக நடத்தப்படாதிருந்த தேர்த்திருவிழாவை நடத்த வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெறவே ஆயர் அவர்களின் அனுமதியோடு 1947 ஜனவரி 1ஆம் தேதி ஆலயத்தில் அறிக்கை வாசிக்கப்பட்டது.

அறிக்கை வாசிக்கப்பட்ட அடுத்த வாரமே துண்டுப் பிரசுரப் போர் தொடங்கி, விவாதப் பொருளாகியது. ஒரு பிரிவினர் தேர் வடம் முதலில் பிடித்துக் கொடுக்கும் சாதித் தலைவனின் உரிமை நீக்கப்பட வேண்டும் என்றும் மறுபிரிவினர் பாரம்பரியம் காக்கப்பட வேண்டும் - தேர் செய்ததே பண்டைய சாதித் தலைவர்கள்தான் என்றும் வாதாடினர். நாட்கள் செல்லச் செல்ல விவாதங்கள் மோதல்களாகவும், மோதல்கள் அடிதடிச் சண்டைகளாகவும் இறுதியாக கத்திக்குத்து சம்பவங்களாகவும் பரிணமித்துப் பாடாய் படுத்திக் கொள்ள ஊரே இரண்டுபட்டுப் போனது. இறுதியாக இரு பிரிவினரும் தங்கள் கணைகளை ஆயரை நோக்கி எய்தனர்.

ஊரே கொந்தளித்துப் போய்க் கிடந்த நிலையைக் கண்ட ஆயர் அவர்கள் வத்திக்கான திருப்பயணமாகச் சென்று விட்டார்கள். இரு பிரிவினரும் விடவில்லை. வத்திக்கான் நோக்கி தந்திகள் பறந்தன. ஆயரோ மிகவும் சாதுர்யமாக இருவருக்கும் பொதுவாக புரிந்து கொள்ள முடியாதபடி "Jathi First Pull After Clergy" என்று ஒரு பதில் தந்தியைக் கொடுத்தார்கள். அது மேலும் சர்ச்சையைக் கிளப்ப, "ஜாதி முதலிலும் பிறகு குருக்களும்" என் ஒரு சாரார் பொருள்கூற மற்றவரோ "குருக்களுக்குப் பிறகே ஜாதி முதலிலும்" என்று கூற அப்படியென்றால் "முதல்" என்ற சொல் ஏன் என்ற கேள்வி எழ தகராறு பெரிதாகத் தொடங்கியது. அன்று ASPயாக இருந்த (Starce) ஸ்ட்ராசே விழாவை நிறுத்திவிடுவேன் என எச்சரிக்கை விட ஒருவாறு ஜாதித் தலைவன் முதலில் வடம் பிடித்துக் கொடுக்க விழா சிறப்பாக நடந்து முடிந்தது.

அருள்தந்தை அலங்காரம் அடிகளார் மிகுந்த பக்குவத்தோடும், யாருக்கும் சாதக பாதகமற்ற ஒரு நடுநிலையோடு சாமர்த்தியமாக விழாவை நடத்திவைத்தார்கள். தேர் திருவிழா அன்று எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடந்துவிடாதபடி தகுந்த முன் ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். அது ஒரு புதிய அனுபவமாக இருந்தது போலும். வெளி ஆடம்பரங்களில் பரவசப் படும் பங்கு மக்களிடம் உண்மையான கிறித்தவ விசுவாச வாழ்வை வளர்க்க பாடுபட வேண்டும் என ஒரு சபைக் கூட்டத்தில் சொன்னதாக பேசிக் கொண்டார்கள்.

அவருடைய ஆற்றுப்படுத்தலில் சிலர் குருவானவர்களாக விரும்பி செமினரியில் சேர்ந்தாலும் அருள்திரு மெதோடியுஸ் பர்னாந்து, அருள்திரு கருணாகரன் கோமஸ் என்று இருவர் குருக்களாக அருட்பொழிவு பெற்றனர்.

1942 முதல் 1952 வரை பல சவால்களை சந்தித்து திறம்பட பணியாற்றிய அருள்தந்தை அலங்காரம் அடிகளாரின் பத்தாண்டு கால பணியில் பங்கில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. அருள்தந்தை அவர்கள் 1952ஆம் ஆண்டு தன் பொறுப்புகளை அருள்தந்தை ஜோசப் பர்னாந்து சுவாமிகளிடம் ஒப்படைத்துவிட்டு மாறிச் சென்றபோது மக்கள் மிகவும் கவலையடைந்ததாக சொல்வார்கள். *- தொடரும்.*

செல்வராஜ் மிராந்தா

'பனிமயம்' 2005 – மீள் பார்வை

26

எந்த பிரிவினராயினும், எந்தத் துறையிலாயினும், சாதனை புரியத் தேவையானவை, இரண்டே,... அவை, தன்னம்பிக்கையும், விடா முயற்சியுமே. தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் ஒன்றை ஒன்று வெளிப்படுத்தும்; ஒன்றை மற்றது உறுதிப்படுத்தும்.

நாமும் சாதனையாளராக நம் மனத்தினில் மாற்றம் பெற வேண்டும். நம்மால் முடியாது என்ற நிலையை மாற்றி, நம்மால் சாதிக்க முடியும் என்ற உள உறுதிப்பாடு நாம் கொள்ள வேண்டும்.

"எனக்கு உறுதியூட்டும் இறைவனின் ஆற்றலைக் கொண்டு என்னால் எல்லாம் செய்ய முடியும்" (பிலி 4:13) என்ற பவுலடியார் போல நாமும் தன்னம்பிக்கையும் தளரா முயற்சி தரும் உறுதியும் உளப்பாங்கும் கொண்டிருத்தல் வேண்டும். – **பணி. ஜெரோஸின் அ. கற்றார்.**

பெண்களுக்குள் பேறுபெற்றவள்

மனுக்குலத்துக்குத் தாயாக்கப்பட்ட பெருமையை அடைந்த மரியா, தான் மரித்து அடக்கம் பண்ணப்பட்டவுடன், மற்ற மானிட ஆன்மாக்கள் உலக முடிவுவரை தத்தமக்குரிய சூட்சம சரீரத்தோடு, இணையக் காத்திருக்க, தான் மட்டும் தன் மகனைப்போல, மரித்த உடனேயே மகிமைக்குரிய சூட்சம சரீரத்தை அடைந்தாள். ஏனெனில், அழிவுக்குரிய மாமிச சரீரம் (மாமிசமும் ரத்தமும்) இறைவனுடைய அழிவற்ற ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டா – 1கொரி 15:50). இவ்வாறு ஆவிக்குரிய, மகிமைக்குரிய உடலை, இறந்தபின் அணிந்து கொள்பவளும் மரியாவே மானிடரில் முதல்வர் ஆவார். – **டாக்டர் ரெக்ஸ் சில்வேயிரா.**

சமுத்திரத்தின் நட்சத்திரம்

மாலுமிகள், கடலின் மத்தியிலே புயலால் உழன்று, துறைமுகமறியாது தத்தளிக்கையில், மரக்கலத்தைச் சரியாய் நடத்த, பலவிதத்திலும் முயலுகின்றனர். பாய்மரத்தை இறுகக் கட்டு கின்றனர். பாயைச் சரிப்படுத்துகின்றார்கள். சுக்கானைத் திறமையாய்ப் பிடிக்கிறார்கள். ஆயினும், காற்றாலும் அலையாலும் புயலாலும் மழையாலும் மரக்கலம் அங்குமிங்கும் அசைந்தோடுகிறது. சரியாய் நடத்த வழி தெரியாதிருக்கையில், சமுத்திரத்தின் நட்சத்திரமாகிய மரியாவிடம் மன்றாடுகிறார்கள். அவளுடைய உதவியை இரந்து கேட்கின்றார்கள். அவளை நம்புகின்றனர். ஒவ்வொருவர் மனதிலும் தைரியம் ஏற்படுகின்றது. கடைசியில் பொல்லாப்பின்றி கரைபோய்ச் சேருகின்றார்கள்.

ஓ! சமுத்திரத்தின் நட்சத்திரமே! இவ்வுலகச் சமுத்திரத்தில் பாவி அல்லல்பட்டுக் கிடக்கிறேன். எனக்கு ஒத்தாசையாயிருப்பீராக. புயலை அமர்த்த வழியைக் காட்டும். மோசமின்றி, இரட்சணியக் கரை சேரக் கருணை புரிவீராக! – ஆமென் சேசு. – **அதி. வண.எம். மோத்தா வாஸ்.**

பாமர ஆசை

ஆத்தா! அருள் நெறஞ்ச ஆத்தா!
காலமெல்லாம் காத்து வரும் ஆத்தா!
கண் நெறஞ்ச தஸ்நேவிஸ் ஆத்தா!
நேருக்கு நின்று ஒங்களப் பாத்தா,
மோச்சத்துல இப்படித்தான் இருப்பீங்கன்னு
நெனச்சுப் பாத்தா, ஒலகத்த பிரிஞ்சு
வாறப்ப, ஒங்களப் பாக்குற பாக்கியம்
கெடைக்கணும்னு ஆசை ரொம்ப ஆத்தா!

– **'கவித்தென்றல்' A.F. மாறன்**

பகிர்தல்

பகிர்தல் என்பது பிறரை மனமாற்றம் அடையச் செய்யும் ஓர் ஒப்பற்ற கருவியாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர், குருக்களின் பாதுகாவலரான **புனித மரிய வியான்னி**. அவர் என்ன செய்தார்?

தொடர்ந்து 15 மணி நேரம் பாவ மன்னிப்புக் கொடுத்தார். மறுநாள் திருப்பலி செலுத்தும் போது, மயக்கமுற்று பலிபீடத்தில் விழுந்தார்.

மக்கள், அவரின் ஆடைகளை அகற்றிப் பார்த்தபோது, அவர், மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக, தன் இடுப்பில் முட்களால் செய்யப்பட்ட 'பெல்ட்' அணிந்திருந்தார்! அது தன் உடலைக் கிழித்து இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தன் இரத்தத்தைப் பகிர்ந்து கொண்டார். இதனைப் பார்த்து, அநேக மக்கள் மனந்திரும்பினர்.

நம் வாழ்வில் எந்த அளவிற்குப் பகிர்தல் இருக்கிறது?

கள பலி!

பகிர்தல் வாழ்வில் நம்மையே வெறுமையாக்குவது மேலான பலி.... அது, எளிதல்ல, எனினும் முயற்சி திருவினை ஆக்கும். இருக்கும்போதே இரத்த தானம், இறந்தால் கண் தானம், உறுப்புகளை தானம்... உடலையே தானமாகக் கொடுப்பதற்கும் தடையில்லை திருச்சபையில்...

பிறர் வாழ, நாம் துன்ப துயரங்களை ஏற்றுக் கொள்வதும், சகித்துக் கொள்வதும், ஒருவித பலிதான்.

குடும்ப வாழ்வில் ஒரு மகனாக – மகளாக – கணவனாக – மனைவியாக – தந்தையாக – தாயாக நாம் அர்ப்பணம் செய்யக் கூடியது ஏராளம். அதைத் தாராள மனப்பான்மையுடன் கையளிப்பதுதான் களப்பலி.

எத்தனையோ களங்கள் நம் எதிரில் உள்ளன. பலிப் பொருளாக நம்மை ஒப்புக் கொடுக்க முன் வருவோம். அதுவே, நற்கருணை நமக்குத் தந்திருக்கும் பாடம். நற்கருணை – நல்ல கருணை.

கருணைக் கண்ணிருந்தால், கண்டும் காணாதவர்களாய் இருக்க இயலாது. நிச்சயமாக நம்மையே கள பலியாக்குவோம் – **பொறுப்பாசிரியர் கலாபன் வாஸ்** (தலையங்கம்).

நற்கருணை

1903 ஆகஸ்டு வரை, நடைமுறையிலிருந்த திருச்சபைச் சட்டப்படி, ஒரு வருடத்தில் இரண்டு, அல்லது மூன்று முறை மட்டுமே நற்கருணை உட்கொள்ள முடியும். அந்தச் சட்டத்தை உடனடியாக மாற்றியமைத்து, "நமது ஆண்டவரைப் பார்த்து அஞ்ச வேண்டாம்! உங்கள் இதயத்திற்குள் வாரந்தோறும் – ஏன், நாள்தோறுங்கூட, நீங்கள் நற்கருணை நாதரை உட்கொள்ளுங்கள்" என்று பிரகடனப் படுத்தினார் **திருத்தந்தை பத்தாம் பத்திநாதர்**.

இதைவிட அதிர்ச்சி காத்திருந்தது திருச்சபைக்கு! 1910 ஆகஸ்டு 8வது நாள் மற்றொரு ஆணையைப் பிறப்பித்தார் திருத்தந்தை பத்தாம் பயஸ். "இந்த நாள் முதல், ஏழு வயதுச் சிறுவர்களும் சிறுமிகளும் புதுநன்மை வாங்கலாம்.... சில சிறப்புத் தகுதிகளை முன்னிட்டு, இதற்கும் குறைந்த வயதிலேயே புதுநன்மை வாங்கலாம்" என்று அறிவித்தார். இதன் காரணமாகவே **'நற்கருணையின் தந்தை'** என்று இந்தப் பாப்பு அழைக்கப்படுகிறார். 1954 மே 29-ல் **12-ம் பத்திநாதர்** திருத்தந்தையினால் **புனிதர்** நிலைக்கு உயர்த்தப்பட்டார். – **தேன்மலர்.**

(இதை எழுதும் கட்டுரை ஆசிரியன், எனது ஏழாவது வயதிலேயே, 1938-ஆம் ஆண்டில், திரு இருதயப் பேராலயத்தில் முதல் திருவிருந்தில் பங்கு பெற்றேன் என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன். நற்கருணை வழங்கியவர் **வணக்கத்துக்குரிய சிலுவை முத்து தல்மேதா** சுவாமிகள்).

மரணம்

மரணம் ஆராதனைக்குரியது. அச்சத்திற் குரியதன்று. வாழ்க்கையைச் சரியான வழியில் அதுதான் செலுத்துகிறது. மனிதனை, மேலான நெறியில் அதுவே செதுக்குகிறது. ஞானம் போதிப்பதில், எந்த ஆசானும் மரணத்திற்கு இணையாக முடியாது.

மரணம், சிலரை கடவுளாக்குகிறது, சிலரை மனிதகுலம் உள்ளவரை மறக்க முடியாத மகாத்மாக்களாக மாற்றிவிடுகிறது.

இயேசு பெருமான் செங்குருதி சொட்ட, சிலுவையில் அறையப்பட்டு, மரணத்தால்தான், அவரை கடவுளின் குமாரனாய் நம்மால் காண முடிந்தது.

மரணத்தை நாம் நாடிப் போகக்கூடாது. ஒவ்வொருவரிடமும் மரணம் ஒருநாள், தேவதையைப்போல் தானே வந்து, கைநீட்டி அழைக்கும். அதன் அழைப்பு, இசையைவிட இனிமையாக இருக்கும். அதுவரை, ஒவ்வொரு நாளும் மலரைப்போல் மலர்ந்து சிரிப்போம். மற்றவர் நலனுக்காக வாழ்ந்து மணப்போம். – **தமிழருவி மணியன்.**

கலாபன் வாஸ்
94863 90793

நம் திருச்சபை, நமது பெருமை - 6

உளவியல் அறிந்த அன்னை!

நம் திருச்சபையைப் பற்றிப் பெருமிதம் கொள்ளத் தக்க இன்னொன்று திருச்சபையின் உளவியல் பார்வை மற்றும் செயல்பாடுகள். ஓர் உளவியல் மேதையின் ஞானத்தோடும், புரிதலோடும் திருச்சபை தம் பிள்ளைகளை வழிநடத்தி வருகிறது என்பது நிச்சயம் நம்மைப் பெருமைப்படுத்துகிறது.

தற்கொலை விழுக்காடு குறைவு. தற்கொலை செய்துகொள்வோரைப் பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கும் ஒரு தகவல் நம்மை வியப்பிலாழ்த்துகிறது. ஆண்டுதோறும் ஒரு மில்லியன் (பத்து லட்சம்) மக்கள் தற்கொலை செய்துகொள்வதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்ட புள்ளிவிபரம் சொல்கிறது. தற்கொலைக்கும் ஒருவர் சார்ந்துள்ள மதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் கத்தோலிக்கரிடையேதான் தற்கொலை விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பது எண்பிக்கப்பட்டுள்ளது. தலைநிமிர்வோம்!

புரோட்டஸ்டன்ட் கிறித்தவர்களோடு ஒப்பிடுகையிலும் கத்தோலிக்கரின் தற்கொலை விகிதம் குறைவாகவே இருக்கிறது. இதைப் பற்றி விரிவாக ஆய்வு செய்த டர்கெய்ம் (Durkheim) என்னும் அறிஞர் (1897) குறிப்பிடும் முதன்மையான ஒரு காரணி இது: பிரிந்த சபையினர் தனித்துவத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். கத்தோலிக்கத் திருஅவையோ ஒருங்கிணைப்புக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது.

